අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/55/03/03 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 13.12.2023

சுற்றறிக்கை இலக்கம் : **47/2023**

சகல மாகாண கல்வி செயலாளர்கள்,
சகல மாகாண கல்வி பணிப்பாளர்கள்,
சகல வலய கல்வி பணிப்பாளர்கள்,
சகல கோட்ட கல்வி பணிப்பாளர்கள்,
சகல அரச பாடசாலை அதிபர்கள்,
சகல அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்,

## அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டி - 2024

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டி, 2024 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்தம் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயம் பற்றி சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்குமாறு தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு இப்போட்டிக்கு மாணவர்களின் படைப்புத்திறன்களை முன்வைப்பதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

### அறிமுகம்

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையினால் நடாத்தப்படுகின்ற இப்போட்டிகளினால் மாணவர்களின் இஸ்லாமிய கலை, கலாசார விழுமியங்களையும் அழகியல் பெறுமானங்களையும் அதன் முக்கியத்துவத்தையும் கணிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதனால் திறன் விருத்தி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய மட்டப்போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

### பிரதான நோக்கம்

முஸ்லிம் சமய, கலாசார, அழகியல் பெறுமானங்களினூடாக மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்து அதனூடாக தேசிய மற்றும் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தி நற்பிரஜைகள் உருவாகுவதற்கு பங்களிப்பு செய்தல்.

### குறிக்கோள்கள்

1. இஸ்லாமிய அடையாளங்களுக்கு ஏற்புடைய விதத்தில் அழகியல் உணர்வை வெளிப்படுத்தும் முறையை பயன்படுத்துதல்.
2. பாரம்பரிய அழகியல்சார் மற்றும் கலாசார பெறுமானங்களைப் பாதுகாப்பதற்கு ஊக்கப்படுத்துதல்.
3. இஸ்லாமிய கலை வடிவங்கள் மற்றும் மொழிகள் தொடர்பான அறிவையும் திறனையும் விருத்தி செய்தல்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

**போட்டிப் பிரிவுகள்**

பங்குபற்றும் போட்டியாளர்களுக்காக பிரதான மூன்று பிரிவுகளிலும் ஒரு திறந்த போட்டி பிரிவிலுமாக நான்கு பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறும்.

1. கனிஷ்ட இடைநிலை போட்டி பிரிவு - தரம் 06, 07, 08
2. சிரேஷ்ட இடைநிலை போட்டி பிரிவு - தரம் 09, 10, 11
3. சிரேஷ்ட போட்டி பிரிவு - தரம் 12, 13
4. திறந்த போட்டிகள் - வயதுக் கட்டுப்பாடில்லை

**2. பங்குபற்றும் விதிமுறைகள்**

2.1 இச்சுற்று நிருபத்தினை மிகக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்வதுடன் இதில் உள்ள விடயங்களை போட்டிகளுக்கான பொறுப்பாசிரியர்கள், பங்குபற்றும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அந்தந்த பாடசாலைகளுக்கான அதிபர்களைச் சார்ந்ததாகும்.

2.2 அரச பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.3 இப்போட்டிக்கு ஒரு பாடசாலையின் தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களில் கற்கும் மாணவர்களும் முதலாம் முறையாக க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2023 இற்கு தோற்றும் மாணவர்களும் பங்குபற்றலாம்.

2.4 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 5.1 அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 28 நிகழ்ச்சிகளுள் ஒரு பாடசாலை ஆகக்கூடியதாக 14 நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்குகொள்ள முடியும். ஒரு போட்டியாளர் குறிப்பிட்ட ஒரு பிரிவிற்குரிய தனிப்போட்டி ஒன்றிலும் திறந்தபோட்டி அல்லது குழுப்போட்டி ஒன்றிலுமாக இரு போட்டிகளில் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

2.5 இப்போட்டிக்காக தயார்படுத்தப்படுகின்ற பாடல்கள் இன, மத பேதங்களுக்கோ அல்லது அரசியல் சார்ந்த கருத்துக்களுக்கோ வித்திடாதவையாகவும், பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானவையாகவும் இருப்பதுடன் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுக்கு முரண்படாமலும் இருத்தல் வேண்டும். கஸீதா, அல்-ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) மர்ஹபா பைத் (வரவேற்பு கீதம்) ஆகிய போட்டிகளுக்குரிய அறபு பாடல்களை பாடும் போது அறபு மூலாதாரத்திற்கேற்ப தெளிவான உச்சரிப்பைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

2.6 போட்டிகளுக்காக விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் பத்திரத்துடன் நஸீத், மஸ்அலா (கவிதை நடை இலக்கியம்), அல்-ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) மற்றும் திறந்த போட்டிகளான களிகம்புக்கலை, அர்-ரக்ஸுர் ரபானீ (ரபான் நடனம்), சமூக நாடகம், மலாயர் கலாசார நிகழ்ச்சி ஆகியவற்றுக்குரிய பாடலாக்கங்களின் பிரதிகள் சுயஆக்கம் என அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.7 மாகாண மட்ட போட்டிகளுக்கு தகைமை பெறும் போட்டியாளர்களின் ஆக்கங்கள் சுய ஆக்கம் என வலய கல்வி பணிப்பாளரின் சான்றுப்படுத்தலுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும். தேசிய மட்ட போட்டிகளுக்கு தகைமை பெறும் போட்டியாளர்களின் ஆக்கங்கள் சுய ஆக்கம் என மாகாண கல்வி பணிப்பாளரின் சான்றுப்படுத்தலுடன் கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளை கல்வி பணிப்பாளருக்கு சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

2.8 வலய, மாகாண, தேசிய மட்ட போட்டிகளின் போது போட்டியாளர்கள் கட்டாயம் பாடசாலைச் சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும். அதேவேளை பாடசாலையை அறிந்துகொள்ளும் வகையில் எவ் அடையாளங்களையும் காட்சிப்படுத்துதல் கூடாது.

2.9 மஸ் அலா (கவிதை நடை இலக்கியம்), அல் ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) மற்றும் சகல திறந்த போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பொருத்தமான கலாசார ஆடைகளை சீராக அணிய முடியும். இவ் ஆடைகள் பாடசாலை முறைமைக்கு பொருத்தமாக இருக்க வேண்டியதுடன் அது பற்றிய முழுப் பொறுப்பும் பாடசாலை அதிபரையும், உரிய பொறுப்பாசிரியர்களையுமே சாரும்.

## 3. போட்டி ஒழுங்குமுறை

3.1 இப் போட்டியானது பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய ஒழுங்கு முறையில் நான்கு சந்தர்ப்பங்களில் இடம்பெறும். அத்துடன் போட்டியாளர்களின் ஆளடையாளத்தை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

3.2 வலய மட்ட போட்டியானது உரிய வலய கல்வி பணிப்பாளரால் ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும்.

3.3 மாகாண மட்ட போட்டிகளின் சகல பொறுப்புகளும் மாகாண கல்வி பணிப்பாளருக்கு வழங்கப்படுவதோடு இச்சுற்றுநிருபத்திற்கு அமைவாக மாகாண மட்ட போட்டிகள் தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மாகாண கல்வி பணிப்பாளரைச்சாரும்.

3.4 மாகாணப் போட்டி ஒழுங்கமைப்பிற்காக சுற்று நிருபங்களில் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் வலய மட்ட போட்டிகளை நடாத்தி முடிவுகளை மாகாண கல்வி பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

3.5 பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை தனிப் போட்டியொன்றில் ஒரு போட்டியாளரே கலந்து கொள்ள வேண்டும். திறந்த அல்லது குழுப்போட்டிகளுக்கு மாத்திரம் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் தகுந்த ஆதாரத்தின் மூலம் நிரூபிக்கும் பட்சத்தில் வலய அல்லது மாகாண கல்வி பணிப்பாளர் வேறொரு போட்டியாளரை அனுமதிக்கலாம். இது வலய மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளுக்கும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

3.6 போட்டி நிகழ்வொன்றில் பங்குபற்றும் போட்டியாளர் முதலில் பங்கு பற்றும் பாடசாலை சார்பில் தொடர்ந்து வரும் போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும். வேறு பாடசாலைக்கு இடை விலகும் பட்சத்தில் மேற்கூறிய விடயம் கட்டாயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

3.7 சகல போட்டிகளுக்கும் தரப்பட்ட நேரத்திற்கு மேலதிகமாக 30 வினாடிகள் வழங்கப்படும்.

3.8 வலய மட்ட, மாகாண மட்ட போட்டியின் போது சமநிலை முடிவுகள் வழங்கப்படக்கூடாது. தேசிய மட்ட போட்டிக்கு மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற பாடசாலை மட்டுமே தகைமை பெறும்.

3.9 தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு பல்கலைக்கழக பிரவேசத்திற்கான சந்தர்ப்பங்களில் முன்னுரிமை இருப்பதனால் போட்டிகள் யாவும் சுற்றுநிருபத்திற்கு அமைவாக எவ்வகை சந்தேகத்திற்கும் இடமின்றி நடாத்தப்படுவதை வலய, மாகாண கல்வி பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

## 4. போட்டியை நடாத்துதல், ஒழுங்கமைத்தல் மற்றும் நடுவர்களை நியமித்தல்

4.1 இப் போட்டிகளுக்குரிய போட்டித் தலைப்புக்கள் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையின் கல்வி பணிப்பாளர் கையொப்பமிட்டு இத்துடன் இணைப்பாக முன்வைக்கப்பட்டுள்ளது.

4.2 போட்டிகளுக்காக விண்ணப்பிக்கும் போது இச்சுற்று நிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துக்கு அமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4.3 பாடசாலை மட்ட போட்டிகள் 10.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடித்து பெறுபேறுகள் வலயத்திற்கு அனுப்புதல் வேண்டும். வலய மட்ட போட்டிகள் 30.04.2024 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்கப்பட்டு பெறுபேறுகள் தமது மாகாண கல்வி பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். மாகாண மட்ட போட்டிகள் 30.06.2024 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு அவற்றின் பெறுபேறுகளை கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளை கல்வி பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். மாகாண மட்ட பெறுபேறுகளில் பாடசாலைகளின் பெயர் சரியாக எழுதப்படல் வேண்டும்.

4.4 தேசிய மட்ட இறுதிப்போட்டிகள் 15.09.2024 ஆம் திகதியளவில் நடாத்தி முடிக்கப்படும்.

4.5 வலய மட்ட போட்டிகளுக்கான நடுவர் குழாம் வலய கல்வி பணிப்பாளரினால் நியமிக்கப்படுவர். தமது மாகாண அல்லது வலய இஸ்லாம் / அழகியல் / தமிழ் பிரிவுக்கு பொறுப்பான உதவி / பிரதி கல்வி பணிப்பாளர்களின் சிபாரிசிக்கு அமைய மாகாண மட்ட போட்டிகளுக்கான நடுவர் குழாத்தை உரிய மாகாண கல்வி பணிப்பாளர் நியமிப்பார். தேசிய மட்ட இறுதிப்போட்டிகளுக்கான நடுவர் குழாத்தை தெரிவு செய்வதற்காக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையின் பிரதி / உதவி கல்வி பணிப்பாளரின் சிபாரிசிக்கு அமைவாக முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி கிளையின் கல்வி பணிப்பாளரினால் அனுமதி வழங்கப்படும். மேலும் போட்டிகள் தொடர்பில் விடய ரீதியாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் போது அவ்விடயம் தொடர்பில் நடுவர் குழாத்துடன் கலந்துரையாடி கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையின் கல்வி பணிப்பாளர் தீர்மானம் மேற்கொள்வார்.

**5. போட்டி நிகழ்ச்சிகள் :**

01. கிராஅத்
02. நஷீத்
03. அதான் கூறுதல்
04. அஸ்மாஉல் ஹுஸ்னா
05. பன்னுல் கத்துல் அறபி (அறபு எழுத்தணிக்கலை)
06. அறபுத் தமிழ் இலக்கியம்
07. கஸீதா
08. மஸ்அலா (கவிதை நடை இலக்கியம்)
09. அல்-ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்)
10. திறந்த போட்டிகள்
    - 10.1 மர்ஹபா பைத் (வரவேற்புக் கீதம்)
    - 10.2 களிகம்புக்கலை
    - 10.3 அர்-ரக்ஸுர் ரபானீ (ரபான் நடனம்)
    - 10.4 சமூக நாடகம்
    - 10.5 சீனடிக்கலை
    - 10.6 மலாயர் கலாசார நிகழ்ச்சி

**5.1 அட்டவணை**

| போ.இல | பிரிவு | தரம் | போட்டியாளர்களின் எண்ணிக்கை | | போட்டியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01. | 01 | 6,7,8 | 01 | ஆண் | கிராஅத் |
| 02. | 01 | 6,7,8 | 01 | பெண் | கிராஅத் |
| 03. | 02 | 9,10,11 | 01 | ஆண் | கிராஅத் |
| 04. | 02 | 9,10,11 | 01 | பெண் | கிராஅத் |
| 05. | 03 | 12,13 | 01 | ஆண் | கிராஅத் |
| 06. | 03 | 12,13 | 01 | பெண் | கிராஅத் |
| 07. | 01 | 6,7,8 | 01 | ஆண் அல்லது பெண் | நஷீத் |
| 08. | 02 | 9,10,11 | 01 | ஆண் அல்லது பெண் | நஷீத் |
| 09. | 03 | 12,13 | 01 | ஆண் அல்லது பெண் | நஷீத் |
| 10. | 02 | 9,10,11 | 01 | ஆண் | அதான் கூறுதல் |
| 11. | 03 | 12,13 | 01 | ஆண் | அதான் கூறுதல் |
| 12. | 02 | 9,10,11 | 01 | பெண் | அஸ்மாஉல் ஹுஸ்னா |
| 13. | 03 | 12,13 | 01 | பெண் | அஸ்மாஉல் ஹுஸ்னா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | 02 | 9,10,11 | 01 | ஆண் அல்லது பெண் | பன்னுல் கத்துல் அறபி (அறபு எழுத்தணிக்கலை) |
| 15. | 03 | 12,13 | 01 | ஆண் அல்லது பெண் | பன்னுல் கத்துல் அறபி (அறபு எழுத்தணிக்கலை) |
| 16. | 02 | 9,10,11 | 01 | ஆண் அல்லது பெண் | அறபு - தமிழ் இலக்கியம் |
| 17. | 03 | 12,13 | 01 | ஆண் அல்லது பெண் | அறபு - தமிழ் இலக்கியம் |
| 18. | 01 | 6,7,8 | 5 - 7 குழு | ஆண் அல்லது பெண் | கஸீதா |
| 19. | 02 | 9,10,11 | 5 - 7 குழு | ஆண் அல்லது பெண் | கஸீதா |
| 20. | 03 | 12,13 | 5 - 7 குழு | ஆண் அல்லது பெண் | கஸீதா |
| 21. | 03 | 12,13 | 7 பேர் குழு | ஆண் | மஸ்அலா (கவிதை நடை இலக்கியம்) |
| 22. | 03 | 12,13 | 7 அல்லது 9 குழு | பெண் | அல்-ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) |
| 23. | தி.போ | - | 9 - 11 பேர் | ஆண் | மர்ஹபா பைத் (வரவேற்புக் கீதம்) |
| 24. | தி.போ | - | 8 - 10 பேர் | ஆண் | களிகம்புக்கலை |
| 25. | தி.போ | - | 10 - 12 பேர் | ஆண் | அர்-ரக்ஸுர் ரபானீ (ரபான் நடனம்) |
| 26. | தி.போ | - | 6 - 8 பேர் | பெண் | சமூக நாடகம் |
| 27. | தி.போ | - | 8 - 10 பேர் | ஆண் | சீனடிக்கலை |
| 28. | தி.போ | - | 8 - 10 பேர் | ஆண் அல்லது பெண் | மலாயர் கலாசார நிகழ்ச்சி |

## 6. நடுவர்கள்

6.1 குறிப்பிட்ட துறையில் போதிய தராதரம், தகைமை, அனுபவம் மற்றும் இஸ்லாமிய அறிவு கலாசார பின்னணி உள்ள நடுவர் குழுவொன்று அவ்வப் போட்டிச் சந்தர்ப்பங்களில் வலய / மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளின போது போட்டி ஒழுங்கமைப்பாளர்களால் வலயக் கல்வி அலுவலக மற்றும் மாகாண கல்வி திணைக்கள இஸ்லாம் பாடப் பொறுப்பு கல்வி பணிப்பாளர்களின் சிபாரிசின்படி நியமிக்கப்படுவர். அதன் பிரகாரம் நடுவர் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும். அத்தீர்மானம் தொடர்பாக போட்டி ஒழுங்கமைப்பாளர்களால் எதுவித தலையீடும் மேற்கொள்ளப்படமாட்டாது.

## 7. முறைப்பாடுகளும் மேன்முறையீடும்

7.1 போட்டிகள் சம்பந்தமாக பெற்றோர், அரசியல் வாதிகள் அல்லது பாடசாலையின் பங்குதாரர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் முறைப்பாடுகள், தலையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.2 நடைபெற்ற போட்டி ஒன்றோ பலவோ சுற்றுநிருபத்திற்கு முரணாக இருந்தால் அல்லது போட்டி நடைமுறை ஒழுங்கில் ஏதாவது பிரச்சினைகள் காணப்படின்,

7.2.1 வலய மட்டப் போட்டிகளின் போது பாடசாலை அதிபர் / கோட்ட கல்வி பணிப்பாளர் மாகாண மட்ட போட்டிகளின் போது வலய போட்டி இணைப்பாளர் அல்லது வலய கல்வி பணிப்பாளர்கள்

7.2.2 தேசிய மட்டப் போட்டிகளின் போது மாகாணப் போட்டி இணைப்பாளர் / மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரில் ஒருவரால் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக போட்டி நடைபெறும் அலுவலகத்தில் உள்ள பிரதம பதிவாளரிடம் குறித்த முறைப்பாடு எழுத்து மூலம் தகுந்த ஆதாரங்களுடன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

7.3 போட்டி நடைமுறை ஒழுங்கில் பிரச்சினைகள் ஏதும் இருப்பின் மட்டுமே மாற்றத்திற்கு உட்படுத்தலாம்.

## 8. சான்றிதழ் வழங்குதல்

8.1 பாடசாலை மட்டம், வலய மட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகளை அந்தந்த பாடசாலை / வலயம் / மாகாணத்திலேயே ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

8.2 தேசிய ரீதியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும்.

8.3 இப் போட்டியில் பங்குபற்றும் சகல போட்டியாளர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் போட்டியின் எல்லா சந்தர்ப்பத்திலும் இச் சுற்றுநிருபத்திலுள்ள சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பதோடு மத்தியஸ்தர்களின் தீர்ப்பினை இறுதி முடிவாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேசிய மட்ட இறுதி போட்டிகளுக்கு தெரிவாகி பங்கு பற்றும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் போட்டி நேர அட்டவணையின் இணைப்பினை நன்றாக வாசித்து விளங்கி அதிபரின் கையொப்பத்தினை உரிய முறையில் பெற்று போட்டியில் பங்குபற்ற வேண்டும். இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டி விதிமுறைகளை மீறியமை உறுதிப்படுத்தப்பட்டால் அது தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

எம்.என். ரணசிங்க
செயலாளர்,
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல.

## போட்டி நிகழ்ச்சிகள்

1. **கிராஅத் : தனி - (ஆண், பெண்)**

**பிரிவுகள்**

- **கனிஷ்ட இடைநிலை (தரம் 6,7,8)**

  அல் - குர் ஆனில் சூறா அல்-முல்க், சூறா அல் - ஜும்ஆ, சூறா அர்-றஹ்மான் ஆகியவற்றில் இருந்து நடுவர்கள் முன்னிலையில் போட்டியாளர் ஒரு சூறாவை திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து அச்சூறாவின் முதல் 15 வசனங்களை ஓதுதல் வேண்டும்.

  **நேரம் : 08 – 10** நிமிடங்கள்

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**

  அல் குர் ஆனில் சூறா யாஸின், சூறா அஸ் ஸஜதா, சூறா அல்-கஹ்ப் ஆகியவற்றில் இருந்து நடுவர்கள் முன்னிலையில் போட்டியாளர் ஒரு சூறாவை திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து அதில் 20 வசனங்கள் ஓதுதல் வேண்டும்.

  **நேரம் : 10 – 12** நிமிடங்கள்

- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**

  அல் குர் ஆனில் சூறா அன்-ஆம், சூறா ஆலு இம்றான், சூறா அல் - பகறா ஆகியவற்றில் இருந்து நடுவர்கள் முன்னிலையில் போட்டியாளர் ஒரு சூறாவை திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து அதில் 25 வசனங்கள் ஓதுதல் வேண்டும்.

  **நேரம் : 12 – 15** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- அல்-குர்ஆனைப்பார்த்து தஜ்வீத் முறைப்படி இராகத்துடன் ஓதுதல் வேண்டும்.
- ஆண்களுக்கும் பெண்களுக்குமாக போட்டிகள் தனித்தனியாக நடைபெறும்.
- போட்டியாளர் வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை பாடசாலை சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : கிராஅத் (தனி)**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| 1. | தஜ்வீத் முறைப்படி ஓதுதல் | 30 |
| 2. | மஹ்ரஜ் (சரியான உச்சரிப்பு) | 30 |
| 3. | குரல் வளமும் இராகமும் | 15 |
| 4. | மெய்ப்பாடு | 10 |
| 5. | ஏற்ற இறக்கம் | 10 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

2. **நஷீத் (பாடல்) : ஆண் அல்லது பெண் (தனி)**

**பிரிவுகள்**

- **கனிஷ்ட இடைநிலைப் பிரிவு (தரம் 6,7,8)**
  **தலைப்பு** : நட்சத்திர வானம்
  **நேரம்** : **03 - 04** நிமிடங்கள்

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**
  **தலைப்பு** : நோன்பின் மகிமை
  **நேரம்** : **04 - 05** நிமிடங்கள்

- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
  **தலைப்பு** : பெண்ணின் பெருமை
  **நேரம்** : **05 - 06** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- இயற்கை பற்றியும் இஸ்லாமிய கருத்தியலையும் கலாசார ஒழுங்குகளையும் பிரதிபலிக்கும் கீதங்கள்.
- வழங்கப்பட்ட தலைப்பிற்கேற்ப தமிழில் பாடலை சுயமாக ஆக்கம் செய்து இசைக்கருவிகளின்றி இராகத்துடன் பாடப்படல் வேண்டும்.
- சினிமா மெட்டுகள் தவிர்க்கப்பட வேண்டும்.
- ஒரு பிரிவிலிருந்து ஒரு போட்டியாளர் மட்டுமே பங்குபற்ற முடியும்
- ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரே போட்டியே நடைபெறும்
- போட்டியின் போது ஆக்கப் பிரதி போட்டி ஏற்பாட்டாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
- வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பாடசாலை சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : நஷீத் (தனி)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | பொருள் புலப்பாடும், தாக்கமும் | 30 |
| 2. | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 20 |
| 3. | குரல்வளமும் இராகமும் | 25 |
| 4. | உச்சரிப்பும் தெளிவும் | 10 |
| 5. | உத்திகள் | 10 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**3. அதான் கூறுதல் : தனி – ஆண்கள் மட்டும்**

பள்ளிவாசல்களில் ஐந்துவேளை தொழுகைக்கு வருமாறு மக்களை முஅத்தீன் (பாங்கு சொல்பவர்) உரக்கச் சத்தமிட்டு அழைப்பது.

**பிரிவுகள்**

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**
  அதான் தெளிவாக கூறுவது.
  **நேரம்** : 04 நிமிடங்கள்
- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
  அதான் தெளிவாக கூறுவதுடன் அதான் துஆ வையும் ஓதுதல் வேண்டும்.
  **நேரம்** : 04 - 05 நிமிடங்கள்

**அதான் துஆ**

அல்லாஹுூம்ம ரப்ப ஹாதிஹித்
த.'.வ(த்)தித் தாம்ம(த்) வஸ்ஸலா(த்)தில்
காயிம(த்)தி ஆ(த்)தி முஹம்மதன்
அல் வஸீல (த்)த வல் .'.பளீல(த்)த
வப் அஸ்ஹுூ மகாமன் மஹ்மூதன் அல்லதி
வஅத்தஹுூ

(சஹீஹுூல் புகாரி : 614)

**விசேட நிபந்தனைகள்**

- அறபு மொழிப்பிரயோகம் தெளிவானதாக இருத்தல் வேண்டும்.
- ஒரு பிரிவில் ஒரு மாணவர் மாத்திரமே பங்குபற்றுதல் வேண்டும்.
- வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பாடசாலை சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : அதான் கூறுதல்**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | மனனத்திறன் | 30 |
| 2. | ஓசையும் உணர்ச்சியும் | 25 |
| 3. | (மஹ்ரஜ்) சரியான உச்சரிப்பும் இராகமும் | 25 |
| 4. | மகாமத் (மெய்ப்பாடு) | 15 |
| 5. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**4. அஸ்மாஉல் ஹுஸ்னா : தனி - பெண்கள் மட்டும்**

**பிரிவுகள்**

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**
  அஸ்மாஉல் ஹுஸ்னாவை லயத்துடன் நயந்து இசைத்தல்
  **நேரம் : 06 – 07** நிமிடங்கள்

- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
  அஸ்மாஉல் ஹுஸ்னாவை லயத்துடன் நயந்து இசைப்பதுடன் தமிழில் பொருளும் கூறுதல் வேண்டும்.
  **நேரம் : 07 – 09** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- அறபு மொழிப்பிரயோகம் தெளிவானதாக இருத்தல் வேண்டும்.
- ஒரு பிரிவில் ஒரு போட்டியாளர் மாத்திரமே பங்குபற்றுதல் வேண்டும்
- இராகத்துடன் இசைக்கருவிகள் இன்றி இசைத்தல் வேண்டும்.
- வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பாடசாலைச் சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : அஸ்மாஉல் ஹுஸ்னா**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | மனனத்திறன் | 30 |
| 2. | ஓசையும் உணர்ச்சியும் | 25 |
| 3. | (மஹ்ரஜ்) சரியான உச்சரிப்பும் இராகமும் | 25 |
| 4. | மகாமத் (மெய்ப்பாடு) | 15 |
| 5 | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**5. பன்னுல் கத்துல் அறபி (அறபு எழுத்தணிக்கலை) : தனி - ஆண் அல்லது பெண்**

**பிரிவுகள்**

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**
  **விடயம்** : “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்ற அறபு வசனம்
  **நேரம்** : **3** மணித்தியாலங்கள்
- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
  **விடயம்** : “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என்ற அறபு வசனம்
  **நேரம்** : **3** மணித்தியாலங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- ஒரு பிரிவில் ஒரு போட்டியாளர் மாத்திரமே பங்குபற்றுதல் வேண்டும்
- ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரே போட்டியாகவே நடைபெறும்
- 64cm X 51cm எனும் அளவுகொண்ட வெள்ளை பிறிஸ்டல் அட்டையில் (கறுப்பு மையினால்) மாத்திரம் வரைதல் வேண்டும்.
- விலங்கு உருவங்கள் வரைதல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- போட்டியாளர் வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை பாடசாலைச் சீருடையிலேயே பங்கு பற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : பன்னுல் கத்துல் அறபி (அறபு எழுத்தணிக்கலை)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | முறையான அறபு எழுத்தமைப்பு | 20 |
| 2. | எழுத்தணிக் கலையமைப்பு | 30 |
| 3. | வர்ணப்பயன்பாடும் நுட்பமுறையும் | 25 |
| 4. | அழகுணர்வு | 15 |
| 5. | பூரணத்துவமும், ஒழுங்கும் | 10 |
| | **மொத்தம்** | **100** |

**6. அறபு - தமிழ் இலக்கியம் : தனி – ஆண் அல்லது பெண்**
**பிரிவுகள்**

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**
  **விடயம்** : தலைப்பாத்திஹா
  **நேரம்** : **07 - 08** நிமிடங்கள்

  1. "அல்லாஹுஃம்ம ஸல்லி அலா முஹம்மத்
     யாறப்பி ஸல்லி அலைஹிவஸல்லிம்
     பீ புத்யி தலைப்பாத்திஹல் முனழ்ழம்" எனும் 1வது பைத் (46 வரிகள்)

  2. "மர்ஹபா யா மர்ஹபா மர்ஹபா உம்மல் ஹுஃசைனி
     மர்ஹபா யா மர்ஹபா மர்ஹபா குர்ரத அயினி
     அப்ஆலஸ் சிபானி அடிமையா முன் தன்னை" எனும் 6வது பைத் (34 வரிகள்)

- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**
  **விடயம்** : தலைப்பாத்திஹா
  **நேரம்** : **08 – 09** நிமிடங்கள்

  1. "யாகுர்ரதுல் முஸ்தபா ஸஹ்ரா றலியல்லாஹ் அன்கி
     யா துர்ரதன் நிஸ்வா நிஸ்பயினா இலல்லாஹி யாகுர்ரதி
     மாதர்கள் நாயகி மா கதீஜா பெருமானே எங்கள் " ( நிலைப்பாத்திஹா-50 வரிகள்)

  2. "மவ்லாய ஸல்லி வசல் லிம்தாயி மன் அபதா
     அலா ஹபீபிக்க ஹைறில் ஹல்கி குல்லிஹிமி
     அல்லாஹ்வின் நாமம் கொண்டோம் அவன் தன் புகழ்ச்சி கொண்டோம்" (எனும் 2வது பைத் (44 வரிகள்)

மேலுள்ள பகுதிகள் அறபு-தமிழில் தரப்படும். இவற்றுள் போட்டியாளர்கள் நடுவர்களின் முன் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்கின்ற தங்களது போட்டிப் பிரிவுக்குரிய அறபு - தமிழ் பகுதியை வாசித்து பின்பு அதனை பொருத்தமான இராகத்தில் பாடுவர்.

**விசேட நிபந்தனை**

- ஒரு பிரிவில் இருந்து ஒரு போட்டியாளர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரு போட்டியாகவே நடைபெறும்.
- இசைக்கருவிகள் பயன்படுத்த முடியாது.
- போட்டியாளர் வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை பாடசாலை சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : அறபு - தமிழ் இலக்கியம்**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | வாசிப்புத்திறன் | 25 |
| 2. | உச்சரிப்பும் உணர்ச்சியும் | 20 |
| 3. | பாடுந்திறன் | 20 |
| 4. | மெய்ப்பாடு | 10 |
| 5. | தொனி | 10 |
| 6. | ஏற்ற வேகம் | 10 |
| 7. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**7. கஸீதா : குழு - ஆண் அல்லது பெண்**
**பிரிவுகள்**

- **கனிஷ்ட இடைநிலைப் பிரிவு (தரம் 6,7,8)**
  **விடயம்** : சுப்ஹான மௌலீத்
  **பங்குபற்றுவோர் எண்ணிக்கை** : 5 - 7 மாணவர்கள்
  **நேரம்** : 3 - 4 நிமிடங்கள்

**சுப்ஹான மௌலீத்**

அல்ஹம்து லில்லாஹில்லதீ அ.'.தானீ
ஹாதல் உலாமத் தய்யிபல் அர்தானி
கத் ஸாத பில்மஹ்தி அலல் இல்மானி
உ௱துஹுºபில்லாஹி திஸ்ஸுºல்தானி
ஹத்தா அராஹுº பாலிஅல் பயானி
ஊ௱துஹுº மின் சர்ரி தீ சன்ஆனி
மின் ஹாஸிதின் முள்தரிமில் அய்னானி
அன்தல்லதீ ஸுºம்மீத பில் குர்ஆனி
அஸ்மத மக்தூபன் அலல் ஜினானி
ஸல்லா அலைகல்லாஹுºபில் அஹ்யானி
அஹ்மதுஹுº பிஸ்ஸிர்ரி வல் - இ.'.லானி
ஹக்கன் அலல் இஸ்லாமி வல் ௱மானி
ஸல்லா அலைக்க காலிகுல் ஜினானி
மாதாம அபதுர் ரஹ்மதிர் ரஹ்மானி

- **சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு (தரம் 9,10,11)**

**விடயம்** : யா வஜீகத் தீனி
**பங்குபற்றுவோர் எண்ணிக்கை** : 5 - 7 மாணவர்கள்
**நேரம்** : 4 - 5 நிமிடங்கள்

யா வஜீகத் தீனீ வல் கரம்
வா ஹலீபல் இல்மீ வல் ஹிக மீ
நபீயுன் நபீயுன் நபீயுன் நபி //

யா ரசூல் அல்லாஹ் ஸலாமுன் அலைக்
யாரபீ அஷ் ஷ.ஃ.னி வத் - தரஜீ
ரசூலுன் ரசூலுன் ரசூலுன் ரசூல் //

யா வபீயல் அஹ்தி வஸ் தீம மி
வா ஹமிதாஸ் சயி வஷ் - ஷியமி
அமீனுன் அமீனுன் அமீனுன் அமீன் //

யா ரசூல் அல்லாஹி யா இம்தா தனா
யா இமாமல் அம்பியா இல் உமனா
ஹாதிமுன் ஹாதிமுன் ஹாதிமுன் ஹாதிமுன் //

வல் பகீதில் மஹ்ழி மு.ஃ.தரிப்புன்
மின்ஹுஃ பில் இப்லாசி வல் அதமி
ரஹீமுன் ரஹீமுன் ரஹீமுன் ரஹீம் //

க்ஹைரா அன்னல் பழ்ல மு.ஃ.தகிதுன
மின் அலீமில் பழ்லி வல் கரமீ
கரீமுன் கரீமுன் கரீமுன் கரீம் //

வ ஸலாதுல்லாஹி ஹாலிக்கினா
ததகாஸ் ஸா சய்யிதல் உமமீ
முஸ்தபா முஸ்தபா முஸ்தபா முஸ்தபா //

அஹ்மதல் முக்தாரி ஸைய்யிதுனா
அததில் அவ்ராகி வத் தியமி
காமிலுன் காமிலுன் காமிலுன் காமீல்

**பாடல் : வாஹீத் ஸபர் காசிமி**

- **சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**

**விடயம்** : யா தைபா
**பங்குபற்றுவோர் எண்ணிக்கை** : 5 - 7 மாணவர்கள்
**நேரம்** : 5 - 6 நிமிடங்கள்

யா தைபா யா தைபா யா தாவல் அய்யானா
இஸ்திக்னாலிக் வில் ஹவானா தானா
(யா தைபா)
லம்மா ஸாரில் மர்கப் நஸானி
ஸாருவத் தம்இ மா ஜபானி
ஆஹது கல்பி மா ஜினானி
யா தைபா யா தீமல் வல்ஹானா
யா தீமல் வல்ஹானா

(யா தைபா)

கிப்லாதி பைதுல்லாஹி ஸாபிர்
அல்லனி யஃமன் லகி ஸாஇர்
யா தூரா ஹல் தரானி நாளிர்
லில் க.்.பதி வது.்.முர்னி பி அமானா
(யா தைபா)

நபீனா அ.்.லா உமனிய்யாதீ
அசூருக லவ் மர்ரதன் பிஹயாதி
வபிஜவாரிக ஸல்லா ஸலாதி
வஸ்குர் ரப்பி வத்லுல் குர்ஆனா
(யா தைபா)

புஷ்ராகில் மதீனா புஷ்ராகி
பி குதூமில் ஹாதியா புஷ்ராகி
ப ஹல்லி ம.்.வா பீ ஹிமாகி
அதமல்லா பன்னூரு சபானா
நூருகும் ஸபானா
(யா தைபா)

**பாடல் : ஆயிஸா அப்துல் பாஸித்**

**விசேட நிபந்தனைகள்**

- ஒரு பாடசாலையில் ஒரு பிரிவிலிருந்து ஆண் அல்லது பெண் இருபாலாரில் ஒரு குழுவினர் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
- ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரு போட்டியாகவே நடைபெறும்.
- அந்தந்த பிரிவுகளுக்குரிய கஸீதாவை அறபு மொழியில் மாத்திரம் பாடுதல் வேண்டும்.
- அறபு மொழிப்பிரயோகம் மிக தெளிவானதாக இருத்தல் வேண்டும்.
- இசைக்கருவிகள் பயன்படுத்தமுடியாது.
- நின்றோ, அமர்ந்தோ, நகர்ந்த வண்ணமோ முன்வைக்கலாம்.
- போட்டியாளர் வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை பாடசாலை சீருடையுடனேயே பங்குபற்றுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : கஸீதா – குழு**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | சரியான உச்சரிப்பு | 25 |
| 2. | குரல்வளமும் இராகமும் | 25 |
| 3. | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 15 |
| 4. | தாளமும், உத்திகளும் | 15 |
| 5. | குழு ஒருமைப்பாடு | 15 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**8. மஸ்அலா (கவிதை நடை இலக்கியம்) : குழு - ஆண்கள்**

**பிரிவு : சிரேஷ்ட பிரிவு - தரம் 12.13**

**விடயம் : 'நுபுவ்வத்'**

தலைப்பின் கருப்பொருளுக்கு ஏற்ப புதிர் வடிவிலான வினாக்களை முன்வைத்தலும் பதிலளித்தலும் (தமிழ்)

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை** : 7 மாணவர்கள்

**நேரம்** : 8 - 10 நிமிடங்கள்

**நிகழ்ச்சி பற்றிய விபரம்**

- உஸ்தாதும் (குரு) துல்லாபுகளும் (சிஷ்யர்கள்) குழுவாக அமர்ந்திருப்பர். உஸ்தாது மத்தியிலும் உஸ்தாதுக்கு வலது, இடது பக்கங்களில் துல்லாபுகள் மும்மூன்று பேர் அமர்திருப்பர்.
- உஸ்தாது பெரிய பக்கீர் ரபானும் துல்லாபுகள் சிறிய வடிவிலான கை ரபானுடன் தடிகளையும் பயன்படுத்துவர்.
- உஸ்தாது புதிர் வடிவில் ஒரு செய்தியை முன்வைப்பார். அது தொடர்பாக ஆச்சரியத்தோடும் நகைச்சுவையோடும் துல்லாபுகள் புதிர்க் கேள்விகளைத் தொடுப்பர். அதற்கு பாடல் வடிவிலும் உரைநடை வடிவிலும் உஸ்தாத் விளக்கமளிப்பார்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் உஸ்தாதும் துல்லாபுகளும் ரபானை உபயோகிப்பர்.
- தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் உஸ்தாதும், துல்லாபுகளும் சேர்ந்து பாட முடியும்.

**விசேட நிபந்தனைகள்**

- பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் விதத்தில் அமைதல் வேண்டும்
- பாடல்களும், ஆடைகளும் இஸ்லாமிய வரையறைக்குள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- சினிமா மெட்டுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
- போட்டியின் போது ஆக்கப்பிரதி போட்டி ஏற்பாட்டாளர்களிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : மஸ்அலா (கவிதை நடை இலக்கியம்) – குழு**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | பொருள் புலப்பாடும் தாக்கமும் | 30 |
| 2. | கதாபாத்திரங்களின் பாத்திரவார்ப்பும் உணர்ச்சி வெளிப்பாடும் | 20 |
| 3. | பக்கப்பாட்டு வினாக்களின் பொருத்தப்பாடும் நகைச்சுவையும் | 20 |
| 4. | தலைமைத்துவமும் குழு ஒருமைப்பாடும் | 15 |
| 5. | ஆடையலங்காரமும் உத்திகளும் | 10 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**9. அல்-ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) - குழு - பெண்**

**பிரிவு : சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)**

**விடயம் : "அல் இஸ்ரா வல் மி.ஃராஜ் " (நடுநிசிப்பயணமும், விண்ணுலக யாத்திரையும்)**

இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற "அல் இஸ்ரா வல் மி.ஃராஜ் " (நடுநிசிப்பயணமும், விண்ணுலக யாத்திரையும்) எனும் நிகழ்வை பைத் ஆக பாடுவதுடன் அதன் விளக்கங்களை தமிழில் உரைநடை வடிவில் எடுத்துரைக்கும் குழு நிகழ்ச்சி.

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 5 - 7** மாணவர்கள்

**நேரம் : 8 – 10** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- தலைப்புக்கு பொருத்தமானதாக 'பைத்' (பாடல்) அறபு மொழியிலும் 'ஹிகாயத்' (விளக்கம்) தமிழிலும் அமைதல் வேண்டும்.
- பைத் (பாடல்) குழுவாக முன்வைப்பதோடு ஹிகாயத் (விளக்கத்தை) ஒவ்வொருவராக எடுத்துரைத்தல் வேண்டும்.
- பைத், ஹிகாயத் என்பன உயிரோட்டமாகவும் உணர்வு பூர்வமானதாகவும் அரங்கேற்றப்படுதல் வேண்டும்.
- அறபு மொழி உச்சரிப்பு மிகத் தெளிவானதாக இருத்தல் வேண்டும்.

- இசைக்கருவியாக ஒரு பக்கீர் ரபானை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.
- இஸ்லாமிய சம்பிரதாய ஆடை அணிகலன்களை அணிய முடியும்.
- போட்டியின் போது ஆக்கப்பிரதி போட்டி ஏற்பாட்டாளர்களிடம் வழங்கப்படல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : அல் - ஹிகாயா வல் பைத் (பாட்டும் பதமும்) - குழு**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | பொருள் புலப்பாடும் தாக்கமும் | 25 |
| 2. | ஆக்கத்திறனும் உணர்வுபூர்வமான முன்வைப்பும் | 25 |
| 3. | இராகமும் தாளமும் சரியான உச்சரிப்பும் | 25 |
| 4. | குழு ஒருமைப்பாடு | 15 |
| 5. | ஆடையலங்காரமும் உத்திகளும் | 05 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

<u>திறந்த போட்டி</u>

**10. மர்ஹபா பைத் (வரவேற்பு கீதம்) : ஆண்கள் (குழு)**

**விடயம்** : திருமண நிகழ்வுகளின் போது மணமகனை மணமேடைக்கு அழைத்துச் செல்கின்ற படலத்தில் அல்லது ஏதாவது விழாக்களின் போது பிரதம விருந்தினரை விழா மேடைக்கு அழைத்துச் செல்கின்ற தருணங்களில் பாடப்படுகின்ற வரவேற்புக் கீதம்.

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 9 - 11** மாணவர்கள்

**நேரம் : 8 - 10** நிமிடங்கள்

**1. மவ்லிதுல் ஹரீர்**

தல அல் பத்ரு அலைனா
மின் சனிய்யாதில் விதாஇ
வஜபஷ் சூக்று அலைனா
மாத ஆ லில்லாஹி தாஇ

அய்யுஹல் மப்ஊசு பீனா
ஜி.'.த பில் அம்ரில் முதாஇ
கத் லபிஸ்னா ஸவ்ப இஸ்ஸின்
ப.'.த தல் பீகிர் ரிகாஇ
அன்த பீல் குல்லி ஜெமிலுன்
வஜமாலுன் யா முதாஇ
வரல.'.னா ஸத்ய வஸ்ஸின்
கப்ல அய்யாமிர் ரலாஇ
ரப்பனா சல்லி அலாமன்

ஹல்ல பீ ஹய்ரில் பிகாஇ
வஅலா ஆலிவ் வசபிஹ்
மாசஆ லில்லாஹி சாஇ
வஸ்பிலிஸ் சித்ர அலைனா
யா முஜீபன் குல்ல தாஇ

2. **மவ்லிது சுஹுதாயில் பத்ரியீன்**

அஸ்ஸுபுஹுபதா மின் தல் அதிஹி
வல்லைலு தஜா மின் வப்ரதிஹி
பாகர் ரஸுலா பல் லன் வ அலா
அஹ்தஸ் ஸுபுலா லித லாலதிஹி
கன்ஸுல் கரமி மவ்லின் னி அமி
ஹுாதில் உமமி லி சரீஅதிஹி
அஸ்கன் நஸபி அ.்.லல் ஹஸபி
குல்லுல் அரபி பி ஹித்மதஹி
ஸஅதிஸ் ஸஜரு நதகல் ஹஜரு
ஸக்கல் கமறு பீ இஸாரதிஹி
ஜிப்ரீலு அதா லைலத இஸ்ரா
வர் - றப்பு த ஆ ஹு லி ஹல்ரதிஹி
நாலஸ் - ஸரபா வல்லாஹு அபா
அம்மாஸலபா மின் உம்மதிஹி
நாலஸ் - ஸரபா வல்லாஹு அபா
அம்மாஸலபா மின் உம்மதிஹி
வமுஹம்மதுனா ஹுவஅ ஸெய்யதுனா
பில் இஸ்ஸுலனாலி இஜாபதிஹி
வஅலைஹி ஸலாதுல்லாஹி வ அலா
ஆலிம் வஅலா பத்ரிய்யதிஹி

3. **சுப்ஹான மௌலிது**

யாநபி ஸலாம் அலைக்கும்
யாரசூல் ஸலாம் அலைக்கும்
யாஹபீப் ஸலாம் அலைக்கும்
ஸலவாதுல்லாஹி அலைக்கும்

அஸ்ரகல் பத்ரு அலைனா
பஹ்தபத் மின்ஹுல் புதூறு
மிஸ்ல ஹுஸ்னிக மாரஅய்னா
கத்துயா வஜ்ஹஸ்ஸுரூரி
(யாநபி)

யாஹபீபி யா முஹம்மத்
யா அறூஸல் ஹாபிகைனி
யாமுஅய்யத் யாமுமஜ்ஜத்
யாஇமாமல் கிப்லதைனி
(யாநபி)

மன்ரஆ வஜ்ஹக யஸ்அத்
யா கரீமல் வாலிதயினி
ரப்பி இர்ஹம்னா ஜமீஅன்
பிஜமிஇஸ் ஸாலிஹாதி
(யாநபி)

## 04. தலைப் பாத்திஹா

லாஇலாஹ இல்லல்லாஹுʷ
லாஇலாஹ இல்லல்லாஹ்
லாஇலாஹ இல்லல்லாஹுʷ
முஹம்மதுர்ரசூலுல்லாஹ்

உத்ததீ ஸலாம் அலைகி
உம்ததீ ஸலாம் அலைகி
உஸ்வதீ ஸலாம் அலைகி
பாத்திமா ஸலாம் அலைகி
(லாயிலாஹ)

மர்ஹபா உம்மல் ஹுʷஸைனி
மர்ஹபா உம்மல் ஹஸனி
மர்ஹபா குர்ரத ஐனி
பாத்திமா ஸலாம் அலைகி
(லாயிலாஹ)

மர்ஹபா பின்தர் ரஸுʷலி
மர்ஹபா சௌஜத் அலிய்யி
மர்ஹபா ஸய்யிததுன் நிஸாஇ
பாத்திமா ஸலாம் அலைகி
(லாயிலாஹ)

ஸல்லல்லாஹுʷ அலா முஹம்மத்
ஸல்லல்லாஹுʷ அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹுʷ அலா முஹம்மத்
ஸல்லல்லாஹுʷ அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹுʷ அலா முஹம்மத்
யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்

**விசேட நிபந்தனைகள்**

- மேலே தரப்பட்டுள்ள பைத்களில் இரண்டை கோர்வைப்படுத்தி ஆக்கபூர்வமான நிகழ்வொன்றாக முன்வைத்தல்.
- ஆண்கள் மட்டுமே பங்குபற்றுதல் முடியும்
- சினிமா மெட்டுகள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.
- ஒலிப்பதிவுப் பிரதிகள் பயன்படுத்தக்கூடாது.
- ஆடை ஆபரணங்கள் இஸ்லாமிய வரையறைக்குள் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- மேடைப் பயன்பாடு முழுமையாகக் கையாளப்படுதல் வேண்டும்.
- இசைக்கருவியாக ஒரு பக்கீர் றபானை மாத்திரம் பயன்படுத்தலாம்.

**புள்ளித்திட்டம் : மர்ஹபா பைத் (வரவேற்பு கீதம்)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | ஆக்கபூர்வமான முன்வைப்பு | 30 |
| 2. | பாடும் திறனும் ஓசை நயமும் | 25 |
| 3. | மெய்ப்பாட்டுணர்ச்சியும் குழு ஒத்திசைவும் | 20 |
| 4. | பொருத்தமான ஆடை அலங்காரம் | 10 |
| 5. | அரங்கியல் பயன்பாடு | 10 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**11. களிகம்புக் கலை : குழு - ஆண்கள் - திறந்த போட்டி**

இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய வைபவங்களான கந்தூரி, மீலாத்துன்நபி விழா மற்றும் திருமண நிகழ்வுகளின் போது மணமகனை மணமேடைக்கு அழைத்துச் செல்கின்ற படலத்தில் அல்லது ஏதாவது விழாக்களின் போது பிரதம விருந்தினரை விழா மேடைக்கு அழைத்துச் செல்கின்ற தருணங்களில் நிகழ்த்தப்படுகின்ற அழகியல் கலை வடிவமாகும்.

**விடயம் :** வட்டக்களரியில் அல்லது மேடையில் ஆற்றுகைப்படுத்தப்படும் கலை வடிவம்.

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 8 - 10** மாணவர்கள்

**நேரம் : 7 – 8** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- 12 அங்குலம் கொண்ட மரத்தினாலான கோல்கள் (கம்பு) பயன்படுத்தப்படுதல் வேண்டும்.
- இஸ்லாமிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமான ஆடை அணிதல் வேண்டும்.
- களிகம்புக் கலை போட்டி நிகழ்ச்சிக்கு பொருத்தமான பாடலை லயத்துடன் பின்னணிப் பாடலாக பாட முடியும்
- பின்னணிப் பாடலுக்காக அண்ணாவியார் உட்பட குறைந்தது இருவரும் கூடியது மூவரும் பங்குபற்றலாம்.
- ஒலிப்பதிவுப்பிரதிகள் பயன்படுத்தக்கூடாது.
- போட்டியின் போது பின்னணிப் பாடலாகப் பாடப்படும் பாடலின் பிரதி போட்டி ஏற்பாட்டாளரிடம் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : களிகம்புக் கலை**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | பாடலும் பாடலுக்கேற்ற லயமும் | 30 |
| 2. | ஆட்டமாறுகை (மல்லி) | 25 |
| 3. | ஒழுங்கமைப்பும் ஒத்திசைவும் | 20 |
| 4. | தாளம் | 10 |
| 6. | பொருத்தமான ஆடை | 10 |
| 7. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

12. **அர் ரக்ஸுர் ரபானி (ரபான் நடனம்) : திறந்த போட்டி – குழு - ஆண்கள்**

**விடயம் :** 'நோன்பு பெருநாள் கொண்டாடுவோம்'

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை :** 10 – 12 மாணவர்கள்

**நேரம் : 5 - 6** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- தலைப்புக்கு பொருத்தமான பாடலானது சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- பாடல் தமிழில் பாடப்படல் வேண்டும்.
- பாடல் வரிகள் எவர் மனதையும் புண்படுத்தாது அமைந்திருத்தல் வேண்டும்.
- சினிமா மெட்டுகள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.
- பக்கவாத்தியமாக பக்கீர் ரபான் மட்டுமே பயன்படுத்தலாம்.
- நடனத்திற்கு போட்டியாளர்கள் 8 அல்லது 10 பேர் கை ரபானுடனும் பாடல், பக்கவாத்தியம் ஆகியவைகளுக்கு 2 போட்டியாளர்கள் பக்கீர் ரபானுடன் பங்குபற்றலாம்.
- இஸ்லாமிய வரையறுக்குட்பட்ட வகையில் ஆடையணிகலன்கள் பொருத்தமானவையாக அமைதல் வேண்டும்.
- போட்டியின் போது பின்னணிக்காகப் பாடப்படும் பாடலின் பிரதி போட்டி ஏற்பாட்டாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : அர் ரக்ஸுர் ரபானி (ரபான் நடனம்)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | தலைப்புக்குப் பொருத்தமான பாடல் | 20 |
| 2. | பாடலுக்குப் பொருத்தமான நடனம் | 20 |
| 3. | உத்திகள், இயல்பான ஆடும் திறன் | 20 |
| 4. | ஒத்திசைவு | 15 |
| 5. | ஆடையணிகள் | 10 |
| 6 | நேர முகாமைத்துவமும் முழுமையான முடிவும் | 15 |
| | **மொத்தம்** | **100** |

13. **சமூக நாடகம் - திறந்த போட்டி – குழு - பெண்கள் மட்டும்**

**விடயம் :** சிதறிய முத்துக்கள்

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 6 - 8** மாணவர்கள்

**நேரம் : 15 - 20** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள் :**

- தலைப்புக்குப் பொருத்தமானதாக நாடகம் தமிழில் இடம் பெறுதல் வேண்டும்.
- நாடகத்தைச் சுயமாக ஆக்கம் செய்தல் வேண்டும்.
- இஸ்லாமிய வரையறைக்கு உட்பட்டதாக இருத்தல் அவசியமாகும்.
- கொச்சையான மொழிப்பிரயோகம், சினிமாப்பாணியிலான சித்தரிப்பு என்பன தவிர்க்கப்படுதல் வேண்டும்.
- நிகழ்ச்சி முடியும் வரை திரை மூடித்திறத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- ஆண்வேடம் தரித்தல் கூடாது.
- இஸ்லாமிய பண்பாட்டு அணிகலன்களை பயன்படுத்தலாம்.
- பின்னணிக்கு ஒலிப்பதிவு இசைகள் பயன்படுத்தலாகாது.
- பாத்திரங்கள் எவர் மனதையும் புண்படுத்தக்கூடாது.
- இசைக்கருவியாக ஒரு பக்கீர் ரபான் மட்டும் பயன்படுத்தலாம்.
- போட்டியின் போது நாடகத்தின் பிரதி போட்டி ஏற்பாட்டாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : சமூக நாடகம் - திறந்த போட்டி**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | நாடக ஆக்கமும் பொருள் புலப்பாடும் | 30 |
| 2. | அரங்க ஒழுங்கமைப்பு | 10 |
| 3. | நடிப்புத் திறனும் உணர்ச்சி வெளிப்பாடும் | 30 |
| 4. | பாத்திரங்களுக்குப் பொருத்தமான ஆடை | 10 |
| 5. | உத்திகள் | 15 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**14. சீனடிக்கலை – திறந்த போட்டி – குழு - ஆண்கள்**

**விடயம் :** திருமண நிகழ்வுகளின் போது மணமகனை மணமேடைக்கு அழைத்துச் செல்கின்ற படலத்தில் அல்லது ஏதாவது விழாக்களின் போது பிரதம விருந்தினரை விழா மேடைக்கு அழைத்துச் செல்கின்ற தருணங்களில் நிகழ்த்தப்படுகின்ற பாரம்பரிய கலைவடிவமாகும்.

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 8 - 10** மாணவர்கள்

**நேரம் : 7 - 8** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- உடல் மறையக் கூடிய பொருத்தமான தளர்வான ஆடை அணிந்து தலைப்பாகை அணிதல் வேண்டும்.
- சலாம் வரிசை (குருத்துவம்) இடம் பெறுதல் வேண்டும்.
- முதலாம் விளையாட்டு எதிர்கொள்ளும் திசையினை முன்னிறுத்தலும் அதே நிலையில் பின்புறம் வேகப்படுத்தலும்.
- நான்கு திசைகளையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.
- அழகியல் உணர்வை வெளிப்படுத்தும் அலங்காரவிளையாட்டுகள் மட்டுமே இடம்பெறுதல் வேண்டும்.
- போட்டியாளர் இருவரிடையே ஜோடி மாற்றம், இடம்பெறுதல் வேண்டும்.
- நின்ற நிலையில் சுழற்சி வகை, வேக அடிமானம் போன்றவை இடம் பெறுதல் அவசியம்.
- குழுக்களுக்கிடையிலான பூட்டு வகை, செயற்பாடு கொண்டவையாக அமைதல் வேண்டும்.

புள்ளித்திட்டம்: **சீனடிக்கலை – திறந்த போட்டி – குழு - ஆண்கள்**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | ஸலாம் வரிசை (நிலை ஒழுங்குபடுத்தல்) | 20 |
| 2. | சுழற்சி வகை வேக அடிமானம் | 20 |
| 3. | திசை மாற்றும் உத்திகள் | 20 |
| 4. | அங்க அசைவுகளும், ஆடை அலங்காரமும் | 20 |
| 5. | முடிவு / பூரணத்துவம் | 15 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

15. **மலாயர் கலாசார நிகழ்ச்சி திறந்தபோட்டி ஆண்கள் அல்லது பெண்கள்**

**விடயம் :** மலாயர் பாரம்பரிய பீங்கான் நடனம் (தாரி பீரிங்)

**பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 8 – 10** மாணவர்கள்

**நேரம் : 5 - 6** நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

- ஒரு பாடசாலையில் ஆண்கள் அல்லது பெண்களில் ஒரு குழுவினர் மட்டுமே பங்பற்ற முடியும்.
- ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரு போட்டியாகவே நடைபெறும்.
- பாடலும் நடனமும் இஸ்லாமிய வரையறைக்குள் அமைதல் வேண்டும்.
- நடனத்திற்கு பொருத்தமானதாக பாடல் அமைவதுடன் பாடல் மலே மொழியில் இடம் பெறுதல் வேண்டும்.
- நடனத்திற்காக செரமிக் பீங்கான் பயன்படுத்தல் வேண்டும்.
- நடனத்திற்காக 6 அல்லது 8 போட்டியாளர்களும், பக்கவாத்திய இசையமைப்புக்கும் பாடலுக்கும் 2 போட்டியாளர்களும் பங்குபற்றுதல் வேண்டும்.
- பக்க வாத்தியமாக பக்கீர் ரபான், எளிய புத்தளிப்புக் கருவிகள் போன்றவற்றை மட்டும் பயன்படுத்த முடியும்.
- ஆடை அணிகலங்கள் இஸ்லாமிய கலாசாரத்திற்கு பொருத்தமானவையாக அமைதல் வேண்டும்.
- மலாய் மாணவர்கள் போதாதவிடத்து பாடசாலையில் உள்ள ஏனைய மாணவர்களும் பங்கு பற்றலாம். எனினும் மலாய் மாணவர்களுக்கே முன்னுரிமை வழுங்கப்படுதல் வேண்டும்.
- போட்டியின் போது பின்னணிக்காகப் பாடப்படும் பாடலின் ஆக்கப்பிரதி போட்டி ஏற்பாட்டாளர்களிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**புள்ளித்திட்டம் : மலாயர் கலாசார நிகழ்ச்சி**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1. | இசையும் நடன ஆக்கமும் | 30 |
| 2. | தாளக்கட்டுப்பாடும், உத்திகளும் | 20 |
| 3. | சோதனைகளும் முன்வைப்பும் | 20 |
| 4. | பொருத்தமான ஆடை | 10 |
| 5. | முடிவு / பூரணத்துவம் | 15 |
| 6. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**குறிப்பு:**

1. போட்டியாளர்கள் அறபு மொழியை மிகச் சரியாக உச்சரிப்பதற்காக கஸீதா, மர்ஹபா பைத் அதான் துஆ ஆகியன அறபு மொழியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
2. கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் **47/2023** எனும் இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய இப்போட்டிகள் இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேஜர். என்.ரீ. நசுமுதீன்
கல்விப் பணிப்பாளர்,
முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளை,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

அலுவலக பாவனைக்கு

| |
|---|
| |

**மாதிரி விண்ணப்பம்**
**அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம்**
**கலாசாரப் போட்டி - 2024**

1. பாடசாலையின் பெயர் : ..................................................................
2. கல்வி வலயம் : ..................................................................
3. மாகாணம் : ..................................................................
4. போட்டி மட்டம் : ..................................................................
5.

| தொ இல | பிரிவு | தரம் | போட்டி இல | போட்டி நிகழ்ச்சி | தனி/ குழு | மாணவர் பெயர் | பால் | பிறந்த திகதி | ஒப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

6. பொறுப்பாசிரியர் பெயர் :............................................

   தொலைபேசி இல :............................................

   ஒப்பம் :............................................

   திகதி :............................................

7. அதிபர் பெயர் :............................................

   தொலைபேசி இல :............................................

   ஒப்பம் :............................................

   திகதி :............................................

   பதவி முத்திரை :............................................

# سبحان مولد

الحمد لله الذي أعطاني

هذا الغلام الطيب الأردان

قد ساد في المهد على الغلمان

أعيذه بالله ذي السلطان

حتى أراه بالغ البيان

أعيذه من شر ذي شنئان

من حاسد مضطرم العينان

أنت الذي سميت في القرآن

أحمد مكتوبا على الجنان

صلى عليك الله في الأحيان

أحمده في السر والإعلان

حقا على الإسلام والإيمان

صلى عليك خالق الجنان

ما دام أبد الرحمة الرحمان

Annex I

يا وجيه الدين والكرم
وحليف العلم والحكم
نبي نبي نبي نبي
نبي نبي نبي نبي

يا رسول الله سلام عليك
يا رفيع الشأن والدرج
رسول رسول رسول رسول
رسول رسول رسول رسول
يا وفي العهد والذمم
وحميد السعي والشيم
أمين أمين أمين أمين
أمين أمين أمين أمين
يا رسول الله يا عمدتنا
يا إمام الأنبياء الأمناء
خاتم خاتم خاتم خاتم
خاتم خاتم خاتم خاتم
والفقيد المحض معترف
منه بالإفلاس والعدم
رحيم رحيم رحيم رحيم
رحيم رحيم رحيم رحيم
غير أن الفضل معتقد
من عظيم الفضل والكرم
كريم كريم كريم كريم

Annex II

كريم كريم كريم كريم

يا وجيه الدين والكرم

وحليف العلم والحكم

نبي نبي نبي نبي

نبي نبي نبي نبي

وصلاة الله خالقنا

تتغاشى سيد الأمم

مصطفى مصطفى مصطفى مصطفى

مصطفى مصطفى مصطفى مصطفى

أحمد المختار سيدنا

عدد الأوراق والديم

كامل كامل كامل كامل

كامل كامل كامل كامل

يا وجيه الدين والكرم

وحليف العلم والحكم

نبي نبي نبي نبي

نبي نبي نبي نبي

يا طيبة

يا طيبة .. يا دوا العيانا
اشتقنالك .. والهوى نداك

لما سار المركب نساني
ساروا والدمع ما جفاني
أخذوا قلبي مع جناني
يا طيبة يا تيم الولهانا

قبلتي بيت الله صابر
علني يوما لك زائر
يا ترى هل تراني ناظر
للكعبة .. وتغمرني بأمانا

نبينا أغلى أمنياتي
أزورك لو مرة بحياتي
وبجوارك صلي صلاتي
واذكر ربي واتلو القرآنا

بشراك .. المدينة بشراك
بقدوم الهادي يا بشراك
فهل لي مأوى في حماك
أتملي .. فالنور سبانا
.. نوركم سبانا

يا طيبة يا طيبة .. يا دوا العيانا

# مولد الحرير

طلع البدر علينا

من ثنيات الوداع

وجب الشكر علينا

ما دعى لله داعي

أيها المبعوث فينا

جئت بالأمر المطاع

قد لبسنا ثوب عز

بعد تلفيق الرقاع

أنت في الكل جميل

وجمال يا مطاع

ورضعنا ثدي وصل

قبل أيام الرضاع

ربنا صل على من

حل في خير البقاع

وعلى آل وصحب

ما سعى لله ساع

واسبل الستر علينا

يا مجيبا كل داع

# مولد شهداء البدريين

الصبح بدا من طلعته

والليل دجى من وفرته

فاق الرسلا فضلا وعلا

أهدى السبلا لدلاته

كنز الكرم مولى النعم

هادي الأمم لشريعته

أزكى النسب أعلى الحسب

كل العرب في خدمته

سعت الشجر نطق الحجر

شق القمر بإشارته

جبريل أتى ليلة إسرا

والرب دعاه لحضرته

نال الشرفا والله عفا

عما سلفا من أمته

فمحمدنا هو سيدنا

فالعز لنا لإجابته

وعليه صلوة الله ولا

آل وعلى بدريته

## سبحان مولد

يا نبي سلام عليكم
يا رسول سلام عليكم
يا حبيب سلام عليكم
صلوات الله عليكم

أشرق البدر علينا
فاختفت منه البدور
مثل حسنك ما رأينا
قط يا وجه السرور

يا حبيبي يا محمد
يا عروس الخافقين
يا مؤيد يا ممجد
يا إمام القبلتين

من رأى وجهك يسعد
يا كريم الوالدين
رب ارحمنا جميعا
بجميع الصالحات

# تلي فاتحة

لا إله إلا الله

لا إله إلا الله

لا إله إلا الله

محمد رسول الله

عدتي سلام عليك

عمدتي سلام عليك

أسوتي سلام عليك

فاطمة سلام عليك

مرحبا أم الحسين

مرحبا أم الحسن

مرحبا قرة عين

فاطمة سلام عليك

مرحبا بنت الرسول

مرحبا زوجة علي

مرحبا سيدة النساء

فاطمة سلام عليك

صلى الله على محمد

صلى الله عليه وسلم

صلى الله على محمد

صلى الله عليه وسلم

صلى الله على محمد

يا رب صل عليه وسلم

<u>අදාන් දුආ</u>

<u>அதான் துஆ</u>

" اللهم رب هذه الدعوة التامة، والصلاة القائمة، آت محمدا الوسيلة والفضيلة، وابعثه مقاما محمودا الذي وعدته"